CC.No. 267/2022 (JM.No.II, DHARMAPURI)

07.04.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW– 1 : திரு. தினேஷ், த/பெ. மாணிக்கம்**

**முதல் விசாரணை**

நான் காளிகவுண்டனூரில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். எதிரி மாதையனை எனக்கு தெரியும். இந்த விபத்தில் இறந்து போன மாணிக்கம் என்னுடைய அப்பா ஆவார். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. கடந்த 21.09.2021 ம் வருடம் காலை சுமார் 08.45 மணிக்கு நானும், என்னுடைய அம்மா பாப்பாத்தி, அப்பா மாணிக்கம், குமார், செல்வி, அழகேசன், தங்கமணி, ஜெகதீஷ், ஈஸ்வரன் என மொத்தம் 10 நபர்கள் 12 வீல் லாரியில் செங்கல் லோடு ஏற்றி கொண்டு இவ்வழக்கின் எதிரியான மாதையன் லாரியை ஓட்டிக்கொண்டு சோழியானூரில் இருந்து தொப்பையார் செல்வதற்காக கோணமடு காடு பிள்ளையார் கோவில் அருகே சென்ற போது லாரியின் ஓட்டுநர் வேகமாக வந்து பிரேக் அடித்ததில் என் அப்பா மாணிக்கம் லாரியின் மேலே இருந்து தலைகுப்புற கீழே விழுந்ததில் கழுத்தின் பின்புறம் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என்னுடைய அப்பாவை ஒரு போக்கு வண்டியின் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 22.09.2021 ம் வருடம் இரவு 12.45 மணிக்கு இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பிரேத விசாரணை செய்து என் அப்பாவின் உடலை வீட்டிற்கு எடுத்து வந்தோம். இது சம்பந்தமாக தொப்பூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். அந்த புகார்மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த விபத்து குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் B.A படித்துள்ளேன். 22.09.2021 அன்று புகார் அளித்தேன். 21.09.2021 அன்று காவல் நிலையம் சென்று நான் தகவல் அளித்த பின்னர் போலிஸார் சம்பவயிடம் வந்தனர் என்றால் சரிதான். அதன் பின்பு மருத்துவமனைக்கு போக சொன்னதால் நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். புகாரை நான் கைப்பட எழுதவில்லை, வேறு ஒருவர் எழுதி கொடுத்தார். 21.09.2021 அன்று புகாரை காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டு பின்பு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். என்னுடைய அம்மா தான் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார். நான் மருத்துவமனைக்கு விபத்தில் இறந்த என் அப்பாவை கொண்டு சேர்க்கவில்லை. நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். நான் சென்ற போது என்னுடைய அப்பா லாரியின் மேலிருந்து கீழே விழுந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் சொல்லி தான் லாரியின் Reverse எடுக்கும் போது என்னுடைய அப்பா கீழே விழுந்துவிட்டார் என்பது தெரியம் என்றால் சரிதான். லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையால் மேற்படி சம்பவம் ஏற்பட்டது என்று அங்கிருந்தவர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய அப்பா லாரியில் உட்கார்ந்து இருந்த போது கீழே விழுந்துவிட்டார், அதை நான் நேரடியாக பார்த்தேன். லாரியின் இடதுபக்கம் பின்புறம் கதவு திறக்கும் இடத்தில் கடைசி சக்கரத்தின் அருகே உட்கார்ந்திருந்தார். லாரியின் இடதுபக்கம் பின்புறம் என்னுடைய அப்பா உட்கார்ந்திருந்ததாக புகாரில் நான் கூறவில்லை என்றால் சரிதான்.

நான் இருசக்கர வாகனத்தில் வரும் போது தான் என்னுடைய அப்பா கீழே விழுந்தார் என்று புகாரில் நான் கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். புகாரில் லாரியின் ஓட்டுநர் வேகமாக வந்து அஜாக்கிரதையாக Reverse எடுத்தார் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். போலிஸார் புகார் அளித்த பின்பு என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக லாரியின் ஓட்டுநர் வேகமாக வந்து அஜாக்கிரதையாக Reverse எடுத்தார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.07 17:46:07 +0530

**CC.No. 267/2022 (JM.No.II, DHARMAPURI)**

**07.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW– 2 : திரு. ராஜேந்திரன், த/பெ. கோபால்**

**முதல் விசாரணை**

நான் கோணமடுவுகாட்டில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. எதிரி மாதையனை எனக்கு தெரியும். இந்த விபத்தில் இறந்து போன மாணிக்கம் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 5 –6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 02.00–03.00 மணிக்கு கோணமடுவுகாட்டின் அருகே நான் சிமெண்ட் மூட்டை இறக்கி கொண்டிருந்த போது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது ஒரு ஆள் கீழே விழுந்துவிட்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் நேரில் எதுவும் பார்க்கவில்லை. இது குறித்து போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 21.09.2022 ம் வருடம் காலை 08.45 மணிக்கு நான் புதியதாக வீடு கட்டுவதற்காக சிமெண்ட் மூட்டைகளை வண்டியிலிருந்து இறக்கி கொண்டிருந்த போது பின்பு நானும், எனது மகனும் எங்கள் வீட்டிற்கு தேவையான செங்கல்லை TN 52 B 8490 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரியில் ஏற்றிக்கொண்டு முத்து பூசாரி ஊரை சேர்ந்த மாதையன் என்பவர் வண்டியை ஓட்டிக்கொண்டும், சோழியானூர் – தொப்பையார் கோணமடுவுகாடு வினாயகர் கோவில் அருகே லாரியின் ஓட்டுநர் மாதையன் வேகமாகவும், கவனகுறைவாகவும் வாகனத்தை ஓட்டிக்கொண்டு திடீரென்று பிரேக் போட்டதில் லாரியின் மேல் உட்கார்ந்திருந்த மாணிக்கம் என்பவர் தலைக்குப்புற கீழே விழுந்ததில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இந்த விபத்தை நேரில் பார்த்த நானும், என் மகனும், அக்கம் பக்கம் இருந்தவர்கள், அவரது மகன் தினேஷ் என்பவர் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அடுத்த நாள் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக போலிஸார் விசாரணையில் சொல்லிவிட்டு இவ்வழக்கின் எதிரி எனக்கு நன்கு தெரிந்த நபர் என்பதால் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.07 17:46:14 +0530

**CC.No. 267/2022 (JM.No.II, DHARMAPURI)**

**07.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW– 3 : திரு. பிரபு, த/பெ. ராஜேந்திரன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் கோணமடுவுகாட்டில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. எதிரி மாதையனை எனக்கு தெரியும். இந்த விபத்தில் இறந்து போன மாணிக்கம் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 5 –6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சிமெண்ட் லோடு ஏற்றி கொண்டு கோணமடுவு காட்டின் அருகே உள்ள வினாயகர் கோவில் அருகே நின்று கொண்டிருந்த போது அந்த இடத்தில் கோணமடுவு காட்டு அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செங்கல் லோடு ஏற்றி கொண்டு அந்த லாரியின் ஓட்டுநர் லாரியை Reverse எடுக்கும் போது மாணிக்கம் என்பவர் லாரியில் இருந்து கீழே விழுந்துகிடந்தார். சத்தம் கேட்டு அங்கு சென்ற பார்த்தேன். காயம்பட்ட அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.விபத்துநடந்து ஒரு நாட்கள் கழித்து இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இந்த விபத்து குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மாணிக்கம் விழுந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், நான் ஆட்டோவின் உள்ளே லாரிக்கு முன்பு இருந்ததாலும், சத்தம் கேட்ட பின்பு சென்று பார்த்ததாலும், மாணிக்கம் எப்படி விழுந்தார் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். லாரி வேகமாக சென்றதா அல்லது மெதுவாக சென்றதா என்றும் லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதா என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.07 17:46:19 +0530

CC.No. 267/2022 (JM.No.II, DHARMAPURI)

07.04.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW– 4 : திரு. கோவிந்தராஜ், த/பெ. கண்ணுபையன்**

**முதல் விசாரணை**

நான் வன்னியனூரில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. எதிரி மாதையனை எனக்கு தெரியாது. இந்த விபத்தில் இறந்து போன மாணிக்கம் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 5 –6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 02.00–03.00 மணிக்கு கோணமடுவுகாட்டின் அருகே நான் சிமெண்ட் மூட்டை இறக்கி கொண்டிருந்த போது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது ஒரு ஆள் கீழே விழுந்துவிட்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் நேரில் எதுவும் பார்க்கவில்லை. இது குறித்து போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 21.09.2022 ம் வருடம் காலை 08.45 மணிக்கு நான் புதியதாக வீடு கட்டுவதற்காக சிமெண்ட் மூட்டைகளை வண்டியிலிருந்து இறக்கி கொண்டிருந்த போது பின்பு நானும், எனது மகனும் எங்கள் வீட்டிற்கு தேவையான செங்கல்லை TN 52 B 8490 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரியில் ஏற்றிக்கொண்டு முத்து பூசாரி ஊரை சேர்ந்த மாதையன் என்பவர் வண்டியை ஓட்டிக்கொண்டும், சோழியானூர் – தொப்பையார் கோணமடுவுகாடு வினாயகர் கோவில் அருகே லாரியின் ஓட்டுநர் மாதையன் வேகமாகவும், கவனகுறைவாகவும் வாகனத்தை ஓட்டிக்கொண்டு திடீரென்று பிரேக் போட்டதில் லாரியின் மேல் உட்கார்ந்திருந்த மாணிக்கம் என்பவர் தலைக்குப்புற கீழே விழுந்ததில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இந்த விபத்தை நேரில் பார்த்த நானும், என் மகனும், அக்கம் பக்கம் இருந்தவர்கள், அவரது மகன் தினேஷ் என்பவர் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அடுத்த நாள் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக போலிஸார் விசாரணையில் சொல்லிவிட்டு இவ்வழக்கின் எதிரி எனக்கு நன்கு தெரிந்த நபர் என்பதால் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.07 17:46:25 +0530

**CC.No. 267/2022 (JM.No.II, DHARMAPURI)**

**07.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW– 5 : திரு. தங்கவேல், த/பெ. சந்திரன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பாறைக்கல்லு என்ற ஊரில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. எதிரி மாதையனை எனக்கு தெரியாது. இந்த விபத்தில் இறந்து போன மாணிக்கம் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 5 –6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 02.00–03.00 மணிக்கு கோணமடுவுகாட்டின் அருகே நான் சிமெண்ட் மூட்டை இறக்கி கொண்டிருந்த போது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது ஒரு ஆள் கீழே விழுந்துவிட்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் நேரில் எதுவும் பார்க்கவில்லை. இது குறித்து போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 21.09.2022 ம் வருடம் காலை 08.45 மணிக்கு நான் புதியதாக வீடு கட்டுவதற்காக சிமெண்ட் மூட்டைகளை வண்டியிலிருந்து இறக்கி கொண்டிருந்த போது பின்பு நானும், எனது மகனும் எங்கள் வீட்டிற்கு தேவையான செங்கல்லை TN 52 B 8490 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரியில் ஏற்றிக்கொண்டு முத்து பூசாரி ஊரை சேர்ந்த மாதையன் என்பவர் வண்டியை ஓட்டிக்கொண்டும், சோழியானூர் – தொப்பையார் கோணமடுவுகாடு வினாயகர் கோவில் அருகே லாரியின் ஓட்டுநர் மாதையன் வேகமாகவும், கவனகுறைவாகவும் வாகனத்தை ஓட்டிக்கொண்டு திடீரென்று பிரேக் போட்டதில் லாரியின் மேல் உட்கார்ந்திருந்த மாணிக்கம் என்பவர் தலைக்குப்புற கீழே விழுந்ததில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இந்த விபத்தை நேரில் பார்த்த நானும், என் மகனும், அக்கம் பக்கம் இருந்தவர்கள், அவரது மகன் தினேஷ் என்பவர் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அடுத்த நாள் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக போலிஸார் விசாரணையில் சொல்லிவிட்டு இவ்வழக்கின் எதிரி எனக்கு நன்கு தெரிந்த நபர் என்பதால் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.07 17:46:31 +0530